கடவுள் துணை.

செந்தமிழ்

மதுரைத்தமிழ்ச்சங்கத்தினின்று மாதந்தோறும் வெளிவரும்

ஒரு தமிழ்ப்பத்திரிகை

"எனைத்தானும் நல்லவை கேட்க வனைத்தானும்
ஆன்ற பெருமை தரும்"—திருவள்ளுவர்.

தொகுதி-சரு.] சருவதாரி-ஞூ ஆடி—ஆவணிமீ [பகுதி—கூ, கo.
Vol. 45. July—September 1948. No. 9, 10.

உள்ளுறை.

இராமாவதாரமும் கலித்தொகையும்:— } திரு. சி. கணேசையரவர்கள், யாழ்ப்பாணம். ககரு—ககக

மதுரைத்தமிழ்ச்சங்கநிருவாகஸபைத்தீர்மானங்கள்:— ... கஉ0

தேவாரம் என்னும் பெயர்வழக்கு:— } திரு. T. V. சதாசிவபண்டாரத்தாரவர்கள். கஉக—கஉ

திருக்கயிலாய ஞானவுலா:— } திரு. வை. சுந்தரேசவாண்டையாரவர்கள், திருவையாறு. கஉகூ—கருச

மதிப்புரை:— கரு௫—கருசா

பத்திராசிரியர்—திரு. கி. இராமாநுஜையங்கார்.

வருஷம் ஒன்றுக்கு ரூ 4.] [தனிப்பிரதி அணா—8.

வெளிநாடுகளுக்கு ரூ 4—8—0.

1949.

Printed by Srimathu R. Shanmuga Rajeswara Naganatha Sethupathy Avl., and Published by T. K. Ramanuja Iyengar at the Tamil Sangam Power Press, No. 54, Tamil Sangam Road, Madura.

ஒரு வேண்டுகோள்.

மதுரைத்தமிழ்ச்சங்கத்தினின்று மாதமொருமுறை வெளிவ
இச்செந்தமிழ்ப்பத்திரிகையில் வெளியிடுமாறு பொருளுரைகளு
மதிப்புரைவேண்டிப் புத்தகம் முதலியனவும் அனுப்புவோர் அவற்றை
பத்திராசிரியர், செந்தமிழ், மதுரைத்தமிழ்ச்சங்கம், மதுரை என்
விலாசமிட்டும்,

செந்தமிழில் வெளியிடுமாறு அனுப்பும் விளம்பரங்களை
பாண்டியன்புத்தகசாலைக்கு நன்கொடையாக அனுப்பும் புத்த
முதலியவைகளையும், செந்தமிழ் செந்தமிழ்ப்பிரசுரங்கள் தமிழ்ச்சங்
பிரசுரங்கள் சங்கக்கலாசாலை சங்கப்பரீக்ஷைகள் முதலியவை சம்ப
மாக அனுப்பும் கடிதங்கள் மணியார்டர்கள் முதலியவற்றையு
இன்னும் இச்சங்கசம்பந்தமாயறியவிரும்பியெழுதும் பிறவற்றை
மானேஜர், மதுரைத்தமிழ்ச்சங்கம், மதுரை என்று விலாசமிட்டு
அனுப்புமாறு இதன்மூலம் கேட்டுக்கொள்ளலாயிற்று.

லக்ஷ்மீநாராயணன்,
மானேஜ

மதுரைத்தமிழ்ச்சங்கத்தில் விற்கப்பெறும் புத்தகங்கள்.

I. சங்கப்பிரசுரம்.

			ரூ.	அ.	
1.	ஞானாமிர்த மூலமும் உரையும்	... ...	1	0	0
2.	சைவமஞ்சரி ...	... ...	1	8	0
4.	வைத்தியசாரசங்கிரகம்	... ...	5	0	0
5,	பன்னூற்றிரட்டு	... ...	3	0	0
6.	மகாபாரதம் அரும்பதவுரையுடன்	... ...	4	0	0
8.	தமிழ்ச்சொல்லகராதி மூன்றாம்பாகம்...	...	5	0	0
10.	தொல்காப்பியம் செய்யுளியல் (நச். உரை	...	1	12	0
11.	திருவருணைக்கலம்பகம் ...	... ...	0	6	0
13.	கலைசைச்சிலேடைவெண்பா	... ...	0	6	0
15.	திருவாரூர் நான்மணிமாலை	... ...	0	4	0
16.	ஸ்ரீகிருஷ்ணசரித்திரவிமர்சம்	... ...	1	4	0
	பன்னூற்றிரட்டு (செலக்ஷன்)	... ...	0	4	0

உ

கடவுள் துணை.

செந்தமிழ்

தொகுதி—௪௫.] சருவதாரி-ஹூ ஆடி—ஆவணிமீ [பகுதி—௯, ௰.

Vol. 45. July—September 1948. No. 9, 10.

இராமாவதாரமும் கலித்தொகையும்

இராமாவதாரத்துள்வரும் சில செய்யுட்கருத்துக்கள், சங்க நூலாகிய கலித்தொகைச்செய்யுட்களிலும் காணப்படுகின்றன. அவற்றை இங்கே எடுத்துக்காட்டுதும்.

௧. விசுவாமித்திரமுனிவர் தமது வேள்விக்கு இடையூறு செய்த தாடகையென்னும் அரக்கியைக் கொல்லும்படி இராமபிரானை இலக்குவனுடன் கூட்டிக்கொண்டுசெல்லும்போது வழியில் ஒரு பெரிய பாலைவனம் எதிர்ப்பட்டது. அதன்கட் செல்லும்போது முனிவர் இராமபிரானும் இலக்குவனும் அளவிலாற்றலைப் பொருந்தினராயினும் 'பூவின்மெல்லியர் வருந்துவர்சிறி'தென மனத்தினெண்ணி அவ்விருவருக்கும் இரு மந்திரங்களை உபதேசித்து அம்மந்திரங்களைச் சிந்தித்துக்கொண்டுவரும்படி சொல்லியருளினார். அவர்களிருவரும் அம்மந்திரங்களைச் சிந்தித்துக் கொண்டு முனிவர்பின்னே சென்றார்கள். அப்பொழுது சுடுசுரமாகிய அப்பாலைவனம் அவர்கள் அடிகளுக்குத் "தெள்ளுதண்புனலொத்துக்" குளிர்ந்தது. இராமபிரான் முனிவரைநோக்கி 'இவ்வனம் பழிபொருந்திய கொடுங்கோலரசன் தாங்கும்நாட்டினும்

கேடடைந்திருப்பதற்குக் காரணம் யாது? சிவபிரான் நெற்றிக் கண்ணால் நோக்க வெந்து இங்ஙனமாயதோ? அன்றி இங்ஙனம் வெந்துஅழிதற்கு வேறு காரணமுண்டோ? அறிவுடையீர்! சொல்லியருளுக' என்று வினவினர். இக்கருத்தினையமைத்தே கம்பர் என்னும் மகாகவிஞர்,

"சுழிபடு கங்கையந் தொங்கன் மௌலியான்
விழிபட வெந்ததோ வேறு தானுண்டோ
பழிபடர் மன்னவன் படைத்த நாட்டினூங்
கழிவதென் காரண மறிஞ கூறென்றான்"

என்று கூறினர். இக்கருத்துச் சங்கநூலாகிய கலித்தொகையினும் வந்திருத்தலை,—

"தொடங்கற்கட்டோன்றிய" என்னும் தலைப்புடைய கலிப் பாட்டுள், (பாலை. க) "சீறரும் கணிச்சியோன் சினவலின் அவ் வெயி லேறு பெற்றுதிர்வனபோல்" என்னும் அடிகளாலும்,

"வறியவனிளமைபோல்" (பாலை. கூ) என்னுஞ் செய்யுளில்,

"வேரொடு மரம்வெம்ப விரிகதிர் தெறுதலின்
அலவுற்றுக் குடிகூவவாறின்றிப் பொருள்வெஃகிக்
கொலையஞ்சா வினைவராற் கோல்கோடி யவனிழ
லுலகுபோ லுலறிய உயர்மா வெஞ்சுரம்"

என்னும் அடிகளின் கருத்தினாலும்,

"நடுவிகந் தொரீஇ நயனில்லான் வினைவாங்கக்
கொடிதோர்த்த மன்னவன் கோல்போல ஞாயிறு
கடுகுபு கதிர்மூட்டிக் காய்சினந் தெறுதலின்
... ...
விறன்மலை வெம்பிய போக்கரு வெஞ்சுரம்" (பாலை. எ)

என்னும் செய்யுளடிகளின் கருத்தானும் அறியலாம்.

(உ) இன்னும், தந்தைசொற்படி காடுசெல்லப் புறப்பட்ட இராமபிரான் அப்புறப்பாட்டைச் சீதாபிராட்டிக்கு அறிவிக்கும்படி

அச்சீதாபிராட்டியிருக்குங் கோயிலை அடைந்தான். அப்போது தன்கணவனாகிய இராமபிரான் மகுடந்தரித்தற்கேற்ற கோலமின்றி வருதலைச் சீதாபிராட்டி நோக்கி நடுக்கமுற்றவளாய் எழுந்து இராம பிரானைநோக்கி நாயகரே! இக்கோலத்தோடுவருதற்கு உற்ற தீங்கு யாது? என்றாள். அப்பொழுது இராமபிரான் பிராட்டியைநோக்கி எனது தந்தைசொற்படி "எம்பி பரதனே முடிசூடிப் பூமியையாள, யான் பதினான்குவருடம் காட்டில்வசித்துவருவேன். அத்துணை யும் நீ இங்கேயே வருந்தாதிரு" என்றான். 'யான் காடுபோகின் றேன்; நீ இங்கேயே இரு' என்ற அப் பிரிவுச்சொல்,

"உறைந்த பாற்கடற் சேக்கை யுடனொரீஇ
அறந்தி றம்புமென் றைய னயோத்தியிற்
பிறந்த பின்பும் பிரிவிலள்"

ஆகிய அப்பிராட்டியின் உள்ளத்தைச் சுடாதுவிடுமோ? செவி வழிச்சென்று அப்பிராட்டியின் உள்ளத்தைச்சுடுமுன்னமே கேட்ட செவியையே சுட்டுவிட்டது. சுட்டபோதே அப்பிராட்டி மிகவுந் துன்பமுற்று மனந்தேம்பி 'என் நாயகர் தந்தையும் தாயும் பணித் ததுசெய்யத்துணிந்தது தக்கதே; என்னை இங்கே "தனித்திரு" எனப் பற்றின்றிச்சொன்னது என்னையோ?' என்று அச்சொல்லை நினைத்துநினைத்துப் பெருமூச்சுவிட்டாள்; அவ்வாறு தன்தேவி வருந்துவதை நோக்கிய இராமபிரான் இவள் தன்னுடன் வருதற்கே விரும்புகின்றாள் என்பதையுணர்ந்து, அப்பிராட்டியை நோக்கி 'என் தேவியே! உன்னடிகளோ பூப்போல மெல்லியன. காடோ பெரிய மலைகளையும் மெழுகுபோல உருக்கும் அழலையுடையது; அவ் வழல் உன் அடிகளைச் சுடும்; அன்றியும் அதன்கணுள்ள கூர்ங் கற்களும் உன்னடிகளைக் கிழிக்கும்; ஆதலால் உன் அடிகள் அக் காட்டில் என்னுடன் வருதற்கேற்ற வலியுடையனவல்ல; ஆதலாற் றான் உன்னை இங்கேஇரு என்றேன்' என்றான். இக்கருத்தையமைத் தே கம்பர்,—

"வல்ல ரக்கரின் மால்வரை போய்விழுந்
தல்ல ரக்கி னுருக்கழற் காட்டயற்
கல்ல ரக்குங் கடுமைய வல்லநின்
சில்ல ரக்குண்ட சேவடிப் போதென்றான்"

என்னுஞ் செய்யுளிற் கூறினார். இச்செய்யுளில் "அழற்காட்டயல்" என்று பாடமிருப்பதே பொருத்தம். 'அழல்காட்டு' எனப் பாடங் கொண்டு, 'அழலைக்காட்டுகின்ற' என்று பொருள்கொள்ளுவர் சிலர். அங்ஙனம் கொள்ளில் காடு என்ற சொல் செய்யுளில் இல்லாகும். ஆதலால் இங்குள்ள பாடத்தின்படி காட்டிலுள்ள அழலிலும் அதன்கணுள்ள கல்லிலும் என்று பொருள்கொள்வது நலம். அரக்கல் - அழுத்திவருத்தல். இஃது இன்றும் வழக்கிலுள்ளது. இச்செய்யுளுள்வரும் காடு வெப்பமுடையதென்னும் கருத்து, கலித்தொகையுள் வருதலை,—

"மரையா மரல்கவர மாரி வறப்ப
வரையோங் கருஞ்சுரத் தாரிடைச் செல்வோர்
... ...
தண்ணீர் பெறாஅத் தடுமாற் றருந்துயரங்
கண்ணீர் நனைக்குங் கடுமைய காடென்றார்" (பாலை. ரு)

என்னும் அடிகளின் கருத்தானும், "பல்வளம் பகர்பூட்டும்" (பாலை. க௬) என்னும் தலைப்புடைய செய்யுளில்வரும் "மணிதிகழ் விறன்மலைவெம்ப..........தூங்கழல் வெஞ்சுரம்" என்னும் அடிகளின் கருத்தானும் "தொடங்கற்கட் டோன்றிய" (க) என்னுந் தலைப்புடைய செய்யுளில்வரும்

'வரைபிளந் தியங்குந ராறுகெட விலங்கிய வழலவி ராரிடை'

என்னும் அடிகளின் கருத்தானும்,

"எல்வளை யெம்மொடு நீவரின் யாழநின்
மெல்லியன் மேவந்த சீறடித் தாமரை
யல்லிசே ராயித ழரக்குத்தோய்ந் தவைபோலக்
கல்லுறி னவ்வடி கறுக்குந வல்லவோ" (பாலை. கஉ)

என்னும் அடிகளானும்,

"அரிதாய வறனெய்தி" (பாலை. க0) என்னுந்தலைப்புடைய செய்யுளில்வரும்,

"அடிதாங்கு மளவின்றி அழலன்ன வெம்மையாற்
கடியவே கனங்குழாய் காடென்றார்"

என்னும் அடிகளாலும் அறியலாம்.

இனி, "காட்டழலில் நின் அடி செல்லும் வலியுடையனவல்ல" என்று கூறியது 'அழற்காடு சுடும்' என்று கருதியே என உட்கொண்ட சீதாபிராட்டி, இராமபிரானைநோக்கிப் பிராணநாயகரே! உம்மைப் பிரிந்திருத்தலே என்னைச் சுடுமன்றி, உம்முடன்வரின் காடு அத்துணை என்னைச் சுடமாட்டாது என்று கூறினாள்; (என்றது சுடுசுரம் அடிகளையே சுடும், நின்பிரிவு உள்ளத்தையும் சுடும்; ஆதலின் காடு பிரிவினுஞ்சுடுமோ என்றாள் என்றபடி.) இக்கருத்தினையமைத்தே கம்பர்,—

"பரிவி கந்த மனத்தொடும் பற்றிலா
தொருவு கின்றனை யூழி யருக்கனும்
எரியு மென்பதி யாண்டைய தீண்டுநின்
பிரிவி னுஞ்சுடு மோபெருங் காடென்றாள்"

என்னுஞ்செய்யுளிற் கூறினார். இக்கருத்து கலித்தொகைச்செய்யுளிலும்வந்திருத்தல்,

"நெடுந்தகா யெம்மையும்,
அன்பறச் சூழாதே யாற்றிடை நும்மொடு
துன்பந் துணையாக நாடி னதுவல்ல
தின்பமு முண்டோ வெமக்கு" (பாலை. ரு)

என்னும் அடிகளின் கருத்தால் நன்கு புலப்படுமென்க. எங்ஙனம் புலப்படுமெனின்? 'துன்பந்துணையாகநாடின்' என்றதனால் நாடாவிடின் அப்பிரிவு சுடுமேயன்றி இன்பந்தாராது என்பது பெறப்படுதலிற் புலப்படுமென்க.

மேற்காட்டிய இராமாவதாரச்செய்யுளில், 'ஊழியருக்கனும் எரியுமென்பது யாண்டையது' என்னும் அடிக்கருத்தைப் பிரிவுக்

கேற்றி, நீர் பற்றிலாதொருவுகின்றீர், அவ்வொருவுதலினும்பார்க்க (என்றது பிரிதலினும்பார்க்க) ஊழிகாலத்தருக்கனுஞ் சுடுவான் என்பது எத்தன்மையது? என்று பொருள்கூறிப் பிரிவுபோல் ஊழி யருக்கனுஞ் சுடமாட்டான் எனவே அச்சுடுசுரம் அத்தகைய பிரிவி னும் சுடுமோ? சுடமாட்டாது என்று கருத்துக்கொள்ளின், காட்டின்வெப்பத்திற்குக் குறைவுதோன்றுமாதலின், அங்ஙனம் பொருள்கோடலினும் அவ்வடிப்பொருளைக் காட்டுக்கேற்றிக் 'காட் டின்வெப்பத்தினல் ஊழியருக்கனும் எரிந்துபோமென்பது எத்தன் மையது? நின்பிரிவினும்பார்க்கக் காடு சுடுமோ?' என்றுளெனின், ஊழியருக்கனையும் சுடும் அத்தகைய காடு உமது பிரிவினும் பார்க்க என்னைச் சுடுமோ? சுடமாட்டாது - என்னும் கருத்தைத் தந்து, ஊழியருக்கனிலும் காடு வெப்பமுடையதென்பதும், காட்டி னும் பிரிவு மிக்கவெப்பமுடையதென்பதும் பெறப்பட்டுப் பிரிவின் கொடுமையை வலியுறுத்துமாதலின் அதுவே சிறந்தபொருளாம். காடு அருக்கனையும் சுடுமென்பது,

> "பாரு மோடாது நீடாதெனும் பாலதே
> சூரு மோடாது கூடாதரோ சூரியன்
> தேருமோடாது"

என்று முன்னும் காட்டினது வெப்பத்தின்கொடுமையைக் கம்பர் மிகுத்துக்கூறுதல் காண்க.

இனி, காடு 'பிரிவினுஞ்சுடுமோ' என்றதனனே, காடு அடியைச் சுடுந்தன்மையதேயாயினும், உம்முடன் வருதலினலே அத்துன்ப மும் இன்பமாகும் என்னுங் ருத்தையுந் தந்து, 'துன்பந்துணையாக நாடின் அதுவல்ல தின்பமுமுண்டோவெமக்கு' என்னுங் கலியடி களின் பொருளைத்தந்துநிற்றல் காண்க. இங்ஙனங்கூறியது தானும் உடன்சேறற்கு இராமபிரானை உடன்படுத்தற்கேயாம். இதனாற் றான் பின்னும் அச்சீதாபிராட்டி அழுது துயரப்படுதலைக்கண்டு ஒன்றும் பேசாது பிராட்டியையும் இராமபிரான் உடன்கொண்டு சென்றானென்க. இங்ஙனமே வான்மீகத்திலும் சீதாபிராட்டி,

'கணவனுடைய இன்பதுன்பங்களைப் பங்காக அனுபவித்தற்குரியவள் மனைவியே' எனத் தக்க நியாயங்கள் காட்டித் தன்னையும் உடன்கொண்டுசெல்லுமாறு இராமபிரானை உடன்படுத்தியே உடன் சென்றாளெனக் கூறப்படுகின்றது. ஆதலின் கணவன்சொல்லை மீறிச் சீதாபிராட்டி காட்டிற்குச்சென்றது அப்பிராட்டிகற்பிற் கிழுக்கென்று குற்றங்கூறுவார்கருத்துப் பொருந்தாதென்க.

(ங) இன்னும், இராமபிரான் 'என்னுடன் வரவமைந்தாய், அதனால் எல்லையற்ற இடர்தருவாய்' என்றுகூற அதனைக்கேட்ட சீதாபிராட்டி, "யான் உம்முடன் வருவதே உம்மைப்பற்றிய துயரமாயின் யான் உம்மைப்பிரியின் உமக்கு இன்பமாகும்போலும்" என்றாள். ஈண்டுத் துறத்தல் என்னுஞ்சொல் பிரிதல் என்னும் பொருளில் வந்ததேனும் குறிப்பால் பெரும்பிரிவை உணர்த்தி நின்றது; எவ்வாறெனின் 'உம்மைப்பிரியில், யான் தனித்து வாழ முடியாமையால் இறந்துவிடுவேன், இறந்துவிடுதலால் என்னைப் பிரிதல் உமக்கு நேரும், நேர்ந்த அப்பிரிவின்பின்' என்பது குறிப்பாற் பெறப்படுதலினென்க. இக்கருத்தினையே கம்பர்,

"உற்று நின்ற துயரமி தொன்றுமே
எற்று றந்தபி னின்பம தாங்கொலோ"

என்று கூறினர். இக்கருத்தும் கலித்தொகையில் வருதலை "இலங்கொளிமருப்பின்" (உங) என்னும் முதலையுடையசெய்யுளில், 'இனியான் உண்ணலுமுண்ணேன் வாழலும் வாழேன்' என வரும் அடியானும் 'தம்மொடு போயின்று ...... என்னுயிர்' (பாலை. உங) எனவரும் அடியானும் அறியலாம்.

(ச) இனி, சில சொற்பிரயோகங்களும் ஒத்துவருகின்றன அவ்வாறு வருதல், இராமாவதாரத்துள், "செவ்விய......தீஞ்சொல் வவ்விய' (நகரம்—க) என்னுஞ் சொற்பிரயோகம், கலித்தொகையிலும் "செவ்வியதீவியசொல்லி" (கஅ) என்று வருதலான் அறியப்படும். இன்னும் காலம்வாய்த்துழி அவ்வாறு வருதலைக் காட்டுதும்.

1948-ஆம் வருஷம் டிசம்பர் மீ 26உ (ஸர்வதாரி வருஷம் மார்கழி மீ 12உ) மாலை 4-மணிக்குக் கூடிய மதுரைத்தமிழ்ச்சங்கத்தின் காரியநிர்வாக ஸபையில் முடிவுசெய்யப்பெற்ற தீர்மானங்களின் விவரம்.

——— :(o): ———

1. மகா-ா-ா-ஸ்ரீ. T. C. ஸ்ரீநிவாஸையங்காரவர்கள் B A., B.L. உப-அக்கிராசனுதிபதி.

2. ,, P. ராமஸ்வாமிராஜா அவர்கள் B.A., B.L.

3. ,, A. ரங்கஸ்வாமி ஐயங்காரவர்கள் B.A.

4. ,, V. ஷண்முகசுந்தரம்பிள்ளையவர்கள் MA. BL., M.L.A. —கூட்டுக்காரியதரிசி.

5. ,, N. R. கிருஷ்ணஸ்வாமி ஐயங்காரவர்கள் B.A., B.L. —காரியதரிசி.

இவர்கள் வந்திருந்தார்கள்.

தீர்மானங்கள்.

1. 1948-ம் வருஷம் ஆகஸ்டு மீ முதல் நவம்பர் மீ முடிய உள்ள சங்கமாபீசு வரவு செலவு கணக்குகள் அங்கீகரிக்கலாயின.

2. மதுரையிலுள்ள மதுரைஜில்லா செண்ட்ரல் கோவாபரேடிவ் பாங்கில் வட்டிக்குக்கொடுத்துள்ள சங்கம் பிக்ஸெட்டெபாஸிட் தொகை ரூ 25011—5—0யும் ஷை பாங்கிலேயே மறுபடியும் 9-மாதங்களுக்கு வருஷத்துக்கு ரூ. 100-க்கு 3-வட்டிக்குப் புதுப்பிக்கலாமென்று தீர்மானிக்கலாயிற்று.

3. சங்கத்தின் நன்மையைப் பொறுத்த பொதுவான விஷயங்கள் அடுத்த மீட்டிங்கில் ஆலோசித்துக்கொள்ளலாமென்றுவைக்கலாயிற்று.

மதுரைத்தமிழ்ச்சங்கம்,
26—12—'48.

T. C. ஸ்ரீநிவாஸையங்கார்,
உப-அக்கிராசனுதிபதி.

———

உ

தேவாரம் என்னும் பெயர்வழக்கு

திரு. T. V. சதாசிவபண்டாரத்தாரவர்கள், ஆசிரியர்,
அண்ணாமலைபல்கலைக்கழகம்.

சைவசமயகுரவர்களாகிய திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரமூர்த்திகள் ஆகிய மூவரும் பாடியருளிய திருப்பாடல்கள் இக்காலத்தில் தேவாரம் என்று வழங்கப்படுகின்றன. பத்து அல்லது பதினொருபாடல்களைக்கொண்ட அவர்களுடைய பதிகங்களும் தேவாரப்பதிகங்கள் என்று கூறப்படுகின்றன. ஆனால் தேவாரம் என்ற பெயரை மூவர்பாடல்கள் எப்போது பெற்றன என்பதும், அவை அப்பெயர் எய்தியமைக்குக் காரணம் யாது? என்பதும் இதுகாறும் ஆராய்ந்தறியப்படவில்லை. எனினும், தேவாரம் என்பதன் பொருள் யாது என்பதைப்பற்றி ஆராய்ச்சிகள் நிகழ்ந்துள்ளன. அது, தே+வாரம் என இருமொழிகளாகப் பிரிந்து கடவுள்மீது பாடப்பெற்ற சொல்லொழுக்கமும் இசையொழுக்கமும் பொருந்திய பாடல் என்று பொருள்படும் என்பர் சிலர். அன்னோர் இப்பொருளுக்கு 'வாரம்பாடுந் தோரியமடந்தையும்' என்ற சிலப்பதிகாரவரியை[1] மேற்கோளாக எடுத்துக்காட்டுவர். வேறுசிலர், வாரம் என்பது அன்பு எனப் பொருள்படும் என்றும், ஆகவே அத்தொடர் கடவுளிடத்து அன்பை உண்டுபண்ணுவது என்ற பொருளைத்தரும் என்றும் உரைப்பர். மற்றுஞ்சிலர் அதனையே தே + ஆரம் எனப் பிரித்து அது கடவுளுக்குச் சூட்டப்பெறும் பாமாலை என்ற பொருளையுணர்த்தும் என்று கூறுவர். ஈண்டு ஆரம் என்பது ஹாரம் என்ற வடசொல்லின் திரிபென்பது அன்னோர்கருத்து. இவையெல்லாம் சொல் கிடந்தமுறையில் அவர்கள் கண்ட பொருளே எனலாம். அதன் உண்மைப்பொருளையுணரவேண்டின் அது முற்காலத்தில் எப்பொருளில் வழங்கப்பட்டுள்ளது என்பதை

[1] ஊர்காண். வரி. 155.

ஆராய்வது இன்றியமையாததாகும். சமயகுரவர்களாதல் ஒன்பதாந்திருமுறையாசிரியர்களாதல் பட்டினத்தடிகள் நம்பியாண்டார் நம்பி ஆகிய பெரியோர்களாதல் தேவாரம் என்னுஞ் சொல்லைத் தம் பாடல்களில் யாண்டும் குறித்தாரில்லை. சேக்கிழாரும் தம் பெரியபுராணத்தில் அச்சொல்லை எடுத்தாளவில்லை. ஆகவே பட்டினத்தடிகள் நம்பியாண்டார்நம்பி சேக்கிழார் ஆகிய சைவப் பெரியார்காலங்களில் மூவர்பாடல்கள் தேவாரம் என்று வழங்கப் படவில்லை என்பது தெள்ளிது. எனவே சேக்கிழார்காலத்திற்குப் பிறகே அவை தேவாரம் என்றபெயரை எய்தியிருத்தல்வேண்டும் என்பது தேற்றம்.

இனி அப்பாடல்களைத் தேவாரம் என்ற பெயருடன் தமிழ் நூலில் முதலில் வழங்கியவர் யாவரெனின் அன்னோர் புலவர்பெரு மக்களாகிய இரட்டையரேயாவர். அவ்வுண்மையை அவர்கள்பாடிய ஏகாம்பரநாதருலாவிலுள்ள,

'மூவாத பேரன்பின் மூவர் முதலிகளும்
தேவாரஞ் செய்த திருப்பாட்டும்'

என்ற அடிகளால் அறியலாம். அவர்கள் தம் உலாவில் மல்லிநாத சம்புவராயனைப் பாராட்டியிருத்தலால் அவ்வேந்தன்காலத்தில் இருந்தவராதல்வேண்டும். அவன் தொண்டைமண்டலத்தில் அவர்கள் படைவீட்டு இராச்சியத்தில் கி. பி. 1321 முதல் 1339 முடிய அரசாண்ட வென்று மண்கொண்ட சம்புவராயனுடைய புதல்வன்; இராசநாராயணமல்லிநாதசம்புவராயன் என்ற பெயருடன் கி. பி. 1336 முதல் 1373 வரையில் அங்கு ஆட்சிபுரிந்தவன்[1]; வீரசம்பன் என்ற சிறப்புப்பெயருடையவன். அவ்வரசனைத் தம் உலாவில் புகழ்ந்துள்ள இரட்டையரும் அவன் ஆட்சிக்காலமாகிய கி. பி. பதினான்காம்நூற்றாண்டின் இடைப்பகுதியில் நம் தமிழகத்தில் வாழ்ந்தவர் ஆவர். ஆகவே கி. பி. பதினான்காம்நூற்றாண்டுமுதல் மூவர்பாடல்கள் தேவாரம் என்று வழங்கப்பெற்றுவருகின்றன என்பது நன்கு தெளியப்படும்.

---

[1] Ins. 86 of 1921. Ins. 424 of 1905. Ins. 390 of 1905.

இனி, கி. பி. பதினொன்று பன்னிரண்டாம் நூற்றாண்டுகளில் அரசாண்ட சோழமன்னர்களின் கல்வெட்டுக்களில் தேவாரம் என்றசொல் காணப்படுகின்றது. அக்காலத்தில் அச்சொல் எப்பொருளில் வழங்கப்பெற்றுள்ளது என்பது ஆராய்தற்குரியதாகும்.

முதல் இராசேந்திரசோழன் ஆட்சியில் தஞ்சைப் பெரிய கோயிலில் வரையப்பெற்றுள்ள 'பெரியபெருமாளுக்குத் தேவார தேவராக எழுந்தருளுவித்த தேவர் பாதாதிகேசாந்தம் ஐவிரலே இரண்டுதோரை உசரத்து நாலு ஸ்ரீஹஸ்தமும் உடையவராகக் கனமாகப் பித்தளையால் எழுந்தருளுவித்த சந்திரசேகரதேவர் திருமேனி ஒன்று[1]' என்ற கல்வெட்டுப்பகுதியில் தேவாரம் என்னுஞ் சொல் வந்துள்ளது. முதல் இராசராசசோழன் அரசியலதிகாரிகளுள் ஒருவனும் பொய்கைநாட்டுத்தலைவனும் ஆகிய ஆதித்தன் சூரியன் தென்னவன் மூவேந்தவேளான் என்பான், அப்பெருங் கோயிலில் அதனை எடுப்பித்த இராசராசசோழன்படிமத்தையும் அவனுடைய வழிபடுகடவுள் சந்திரசேகரர் திருமேனியையும் கி. பி. 1015ஆம் ஆண்டில் எழுந்தருளுவித்த செய்தியை அக் கல்வெட்டு உணர்த்துகின்றது. அதில் பயின்றுவரும் தேவாரம் என்ற சொல் வழிபாடு என்னும் பொருளில் வந்திருத்தல் அறியத்தக்கது.

அவ்வேந்தனது மற்றொருகல்வெட்டிலும் தேவாரம் என்ற சொல் காணப்படுகிறது. அஃது 'உடையார் ஸ்ரீராசேந்திரசோழ தேவர் கங்கைகொண்டசோழபுரத்துக் கோயிலினுள்ளால் முடிகொண்டசோழன்திருமாளிகையில் வடபக்கத்து தேவாரத்துச் சுற்றுக்கல்லூரியில் தானஞ்செய்தருளாயிருந்து உடையார் ஸ்ரீ இராஜராஜஈசுவரமுடையார் கோயிலில் ஆசார்யபோகம் நம் உடையார் சர்வசிவபண்டிதசைவாசாரியர்க்கு'[2] என்ற கல்வெட்டுப்பகுதியில் இருத்தல் காண்க. இக்கல்வெட்டில் குறிக்கப்பெற்ற கோயில்

---

[1] South Indian Inscriptions, Vol. II. No. 38.

[2] Ibid No. 20.

என்பது அரண்மனையாகும். தேவாரம் என்பது அரசன் நாள் தோறும் தன் வழிபடுகடவுளைப் பூசித்தற்கு அரண்மனையில் அமைத்திருந்த வழிபாட்டறையாகும். ஆகவே, இக்கல்வெட்டில் வந்துள்ள தேவாரம் என்ற சொல் வழிபாடுநிகழ்ந்துவந்த இடத்தைக் குறித்தல் உணரத்தக்கதாம்.

அம் முதல் இராசேந்திரசோழனது ஆட்சிக்காலத்தில் கி. பி. 1017ஆம் ஆண்டில் நாங்கூருடையான் பதஞ்சலிபிடாரன் என்பவன் தேவாரநாயகம் செய்பவனாயிருந்தான் என்று கும்பகோணம் தாலூகா மானம்பாடியிலுள்ள கல்வெட்டொன்று[1] கூறுகின்றது. அக் கல்வெட்டில் தேவாரநாயகம் என்ற தொடரைக்கண்ட ஆராய்ச்சியாளர் எல்லோரும், கோயில்களில் தேவாரம்பாடுவோரைக் கண்காணித்தற்பொருட்டு முதல் இராசேந்திரசோழன் அமர்த்தியிருந்த ஓர் அதிகாரியே தேவாரநாயகம் ஆவன் என்று உறுதிசெய்துவிட்டனர்.[2] சோழமன்னர்களின் ஆட்சிக்காலத்தில் சமயகுரவர்மூவர்பதிகங்களும் கோயில்களில் வழிபாடுநடைபெற்றபோது இசையுடன் பாடப்பெற்றுவந்தன என்பது ஆங்காங்குக் காணப்படும் பல கல்வெட்டுக்களால் நன்கறியப்படுகிறது. ஆனால், தேவாரநாயகம் என்ற அதிகாரி ஒருவன் கோயில்தோறும் சென்று அந்நிகழ்ச்சிகளைக் கண்காணித்த செய்தியாதல் அவன் அங்ஙனம் கண்காணித்தஞான்று கண்ட குறைபாடுகளை நீக்கியமையாதல் அவன் செய்த பிற சீர்திருத்தங்களாதல் அவ்வேந்தர்களின் கல்வெட்டுக்களில் யாண்டும் காணப்படவில்லை. கோயில்களில் நாள் வழிபாடு திங்கள்விழா ஆண்டுவிழா முதலானவற்றை நடத்துவதற்கு ஸ்ரீகாரியஞ்செய்வான் என்ற அதிகாரி ஒருவன் அந்நாளில் அரசனால் அமர்த்தப்பெற்றிருந்தான் என்பது கல்வெட்டுக்களால் புலப்படுகின்றது[3]. அவனே அவ்வக்கோயிலில் திருப்பதிகம் பாடுவோரை மேற்பார்க்கும் கடமையுடையவன் ஆவன். எனவே,

---

[1] Ins. 97 of 1932.

[2] The Colas, Vol. II, pp. 476 and 477.

[3] South Indian Inscriptions, Vol II, Nos, 40 and 6o.

அதன்பொருட்டுத் தனி அதிகாரி ஒருவன் அரசனால் அமர்த்தப் பெற்றிருந்தான் என்று உறுதிசெய்துவிடல் ஏற்புடைத்தன்று. அன்றியும், ஸ்ரீகாரியஞ்செய்வோரையும் கண்காணித்தற் பொருட்டு ஸ்ரீகாரியக்கண்காணிநாயகமென்ற தலைமையதிகாரி ஒருவன் அக்காலத்தில் இருந்தமை குறிப்பிடத்தக்கது.[1]

இனி, தேவாரநாயகம் என்போன் சிவன்கோயில்களில் திருப்பதிகம்பாடுவோரைத்தான் கண்காணித்தல்கூடும். அங்ஙனமாயின் திருமால்கோயில்களில் திருவாய்மொழிமுதலானவற்றைப் பாடிவந்தவர்களைக் கண்காணித்தவன் ஒருவன் இருத்தல்வேண்டுமன்றோ? சோழமன்னர்களின் ஆட்சிக்காலத்தில் திருமால்கோயில்களில் திருவாய்மொழி பாடப்பெற்றுவந்தமை பல கல்வெட்டுக்களால் அறியக்கிடக்கின்றது. ஆனால், அந்நிகழ்ச்சிகளைக் கண்காணித்தற்குத் திருவாய்மொழிநாயகம் என்ற அதிகாரி இருந்ததாகத் தெரியவில்லை. ஆகவே, தேவாரநாயகம் என்பவன் வேறோர் அலுவல்புரிந்துவந்த அதிகாரியாயிருத்தல்வேண்டும் என்பது திண்ணம். அரசன் நாள்தோறும் தன் அரண்மனையில் நிகழ்த்திவந்த வழிபடுகடவுள் பூசையில் அதற்குரியபணிகளைச்செய்துவந்த பணிமக்களைக் கண்காணிக்கும் அலுவல்பார்த்த அதிகாரியே தேவாரநாயகம் என்று வழங்கப்பெற்றனன் என்பது நுணுகியாராயுமிடத்து நன்கு புலனாகின்றது. எனவே, அரசனது நாள்வழிபாட்டிற்குரிய பணிகளை மேற்பார்ப்பவன் என்பதே அத்தொடரின் பொருளாகும். அதிலுள்ள தேவாரம் என்றசொல் வழிபாடு என்று பொருள்படுதல் அறிக.

தஞ்சாவூர்ஜில்லாவிலுள்ள திருக்களர்க் கல்வெட்டொன்றிலும் திருச்சிராப்பள்ளிஜில்லாவிலுள்ள அல்லூர்க்கல்வெட்டொன்றிலும் தேவாரம் என்ற சொல் காணப்படுதலால் அவற்றையும் ஆராய்தல் இன்றியமையாததாகும். அக் கல்வெட்டுப்பகுதிகள்,

---

[1] Ibid, No. 36.

'நம்தேவாரத்துக்குத் திருப்பதியம்பாடும் பெரியான் மறைதேடும் பொருளான அகளங்கப்பிரியனுக்கும் .... வம்சத்தார்க்கும் காணியாக............செய்யக்கடவன எல்லாம்...........செய்யப் பண்ணி இப்படிக் கல்வெட்டப்பண்ணுக - இது திருவாய்மொழிந் தருளின திருமுகப்படி [1]' (திருக்களர்க்கல்வெட்டு.)

'உறையூர்க்கூற்றத்து திருவடகுடி மகாதேவர் ஸ்தானமடம் தேவாரத்துக்குத் திருப்பதியம் விண்ணப்பஞ்செய்யும் அம்பலத்தாடி திருநாவுக்கரையனுக்கும் இவன்வர்க்கத்தார்க்கும் தானநிமித்த மாகக் கொடுத்தோம் ....மடபோகமாக நித்தம் தூணிநெல் கொள்ளச்சொன்னோம்[2]' (அல்லூர்க்கல்வெட்டு) என்பனவாம்.

இவ் விருகல்வெட்டுக்களிலும் 'நம் தேவாரத்துக்குத் திருப் பதியம்பாடும் பெரியான் மறைதேடும்பொருளான அகளங்கப் பிரியன்' எனவும் 'ஸ்தானமடம் தேவாரத்துக்குத் திருப்பதியம் விண்ணப்பஞ்செய்யும் அம்பலத்தாடி திருநாவுக்கரையன்' எனவும் அமைந்துள்ள தொடர்கள் கூர்ந்துநோக்கற்பாலவாகும். அவை அரண்மனையிலும் கோயிலைச்சார்ந்தமடத்திலும் நடைபெற்றுவந்த நாள்வழிபாடுகளில் திருப்பதிகம்பாடியவர் இருவர்பெயர்களைக் கூறுகின்றன. அன்றியும், 'தேவாரத்துக்குத் திருப்பதியம்' என்ற தொடரே தேவாரம் வேறு திருப்பதியம் வேறு என்பதை நன்கு வலியுறுத்துதல் அறியத்தக்கது. கி. பி. பதினொன்றும்நூற்றாண் டில் வரையப்பெற்ற இக்கல்வெட்டுக்களில் பயின்றுவரும் தேவாரம் என்ற சொல் வழிபாடு என்னும் பொருளில் அமைந்துள்ளமை காண்க.

இனி முதற்குலோத்துங்கசோழன் கி. பி. 1110-ஆம் ஆண்டில் தொண்டைநாட்டிலுள்ள தக்கோலத்தில் திருவூறலிறைவனை

---

[1] South Indian inscriptions Vol. VIII No. 260

[2] Ibid, No. 675

வழிபட்டபிறகு அவ்வூர்மண்டபம் ஒன்றில் பகலில் தங்கியிருந்த செய்தி காஞ்சிமாநகரிலுள்ள கல்வெட்டொன்றில்[1] காணப்படு கிறது. அதில் வேந்தன் திருவூறலிறைவனை வழிபட்ட நிகழ்ச்சியை உணர்த்தும்பகுதி 'திருவூறல்பெருமானைத் தேவாரஞ்செய்து' என்று குறிக்கப்பெற்றுள்ளது. ஆகவே சோழமன்னர்களின் ஆட்சிக் காலத்தில் தேவாரம் என்ற சொல் வழிபாடு(பூசை)என்னும்பொரு ளில் வழங்கிவந்தது என்பது நன்கு துணியப்படும்.

கி. பி. பதின்மூன்றாம்நூற்றாண்டின் இடைப்பகுதியில் திரு முனைப்பாடிநாட்டில் ஆட்சிபுரிந்துகொண்டிருந்த பல்லவமன்னன் கோப்பெருஞ்சிங்கன்கல்வெட்டொன்றில் தேவாரம் என்னுஞ்சொல் வழிபாடு என்னும் பொருளில்வந்துளது. செய்யுள்வடிவத்திலுள்ள அக்கல்வெட்டு,[2]

'பொன்னி நாடனு முரிமையு மமைச்சரு மிருப்பதுன் சிறைக்கோட்டம்
பொருப்பி ரண்டென வளர்ந்ததோள் வலியினாற் கொண்டது சோணாடு
கன்னி காவிரி பகிரதி நின்பரி யாடுதண் டுறைவாவி
காவல் மன்னவர் திறையுடன் உணங்குவ துன்பெருந் திருவாசல்
வென்னி டாதபோர்க் கன்னடர் வென்னிடப் பொருததுன் பெருஞ்சேனை
விளங்கு செம்பொனின் அம்பலக் கூத்தநீ விரும்பிய தேவாரம்
பின்னி காவல அவனிநாராயண பேணுசெந் தமிழ்வாழப்
பிறந்த காடவ கோப்பெருஞ் சிங்கநின் பெருமையார் புகழ்வாரே'

என்பதாம்.

இதுகாறும் விளக்கியவாற்றால் கி. பி. பதின்மூன்றாம்நூற்றாண் டின் பிற்பகுதிவரையில் கல்வெட்டுக்களில்வந்துள்ள தேவாரம் என்பது வழிபாடு என்னும் பொருளில் வழங்கப்பெற்றுள்ளமை தெள்ளிதிற் புலனாகும்.

---

1 Annual report on South Indian Epigraphy for 1921, part II, para 33.

2 Epigraphia Indica, Vol. XXIII, No 27.

கி.பி பதினான்காம்நூற்றாண்டின் முற்பகுதியிலிருந்த கொற்றங்குடி உமாபதிசிவாசாரியர் தம் கோயிற்புராணத்தில் 'தப்பற்றுயர்தவ மூவாயிரவர்கள் தாவாமறையொடு தேவாரங், கைப்பற்றியபணி முற்றப்புலிமுனி கழலான் விழவெழு தொழில்செய்வான்' என்று கூறியிருத்தலால் அவர்காலத்திலும் தேவாரம் என்பது வழிபாடு என்னும் பொருளில் வழங்கியுள்ளமை உணரற்பாலது. ஆகவே கல்வெட்டுக்களால் அறியப்பெற்ற இப்பொருள் நூல்வழக்கானும் உறுதியெய்துதல் காண்க. எனவே இறைவழிபாட்டில் (தேவாரத்தில்) ஓதப்பெற்றுவந்தமைபற்றி மூவர்பாடல்கள் தேவாரம் என்று வழங்கப்பெற்றனவாதல்வேண்டும். அவ்வருட்பாடல்களைத் தேவாரம் என்று நூலில் முதலில் குறிப்பிட்டோர் இரட்டையரே என்பது முன்னர் விளக்கப்பெற்றது. ஆகவே, அப்புலவர்களின் காலமாகிய கி. பி. பதினான்காம்நூற்றாண்டுமுதல் மூவர்பாடல்கள் தேவாரம் என்று வழங்கிவருகின்றன என்பது தேற்றம்.

இதுகாறும் கூறியவாற்றால் முற்காலத்தில் தேவாரம் என்பது வழிபாடு என்ற பொருளில் வழங்கியது என்பதும் வழிபாட்டில் பாடப்பெற்றுவந்தமைபற்றி, கி. பி. பதினான்காம்நூற்றாண்டு முதல் மூவர்பாடல்கள் தேவாரம் என்று வழங்கப்பெற்றுவருகின்றன என்பதும் அதற்குமுன்னர் அப்பாடல்கள் அப்பெயரால் வழங்கப்பெற்றமைக்குக் கல்வெட்டுச்சான்றுகளாதல் இலக்கியச் சான்றுகளாதல் கிடைக்கவில்லை என்பதும் நன்குபுலப்படுதல் காண்க.

௨

திருக்கயிலாய ஞானவுலா

[திரு. வை. சுந்தரேசவாண்டையாரவர்கள், திருவையாறு.]

உலா என்பது தமிழிலுள்ள தொண்ணூற்றாறுவகைப் பிரபந்தங்களில் ஒன்று. அது உலாப்புறம் எனவும் வழங்கும். இது, ஒரு தலைவன் தேர் முதலிய ஊர்திகளுள் ஒன்றில் ஏறி ஊரில் உலாவிவரக் கண்ட ஏழுவகைப்பருவத்துப் பொதுமகளிர் அவன் மேல் காதல்கொண்ட தன்மையை விரித்துக் கலிவெண்பாவில் கூறுவது. "ஊரொடு தோற்றமும் உரித்தென மொழிப" (தொல். புறம் 30) என்ற சூத்திரவுரையில் இது புரைதீர்காமத்திற்கன்றிப் பக்குநின்றகாமத்திற் குரித்தென்றும், அக்காமம் தேவரிடத்தும் மக்களிடத்தும் விளங்குவதென்றும் ஆசிரியர் நச்சினார்க்கினியர் கூறுவர். இதன் இலக்கணவிரிவு பன்னிருபாட்டியலிலே பின்வருமாறு கூறப்பட்டுள்ளது.

"முதனிலை பின்னெழு நிலையுலா வெண்கலி"

"பேதை முதலா எழுவகை மகளிர்கண்
டோங்கிய வகைநிலைக் குரியான் ஒருவனைக்
காதல்செய் தலின்வரும் கலிவெண் பாட்டே"

என்பன முதலிய சூத்திரங்களிற் காணலாம்.

கயிலாயஞானவுலா என்பது திருக்கயிலையிற் பாடிய ஞானவுலா என்று பொருள்படும். இதனை "ஆதியுலா" எனவும் கூறுவர். இதன் வரலாறு:—சுந்தரமூர்த்திசுவாமிகள் சேரநாட்டிலே திருவஞ்சைக்களத்திலிருந்து இறைவன்பணியால் அவன்விடுத்த வெள்ளானைமேலேறி விண்வழியாகத் தம் தோழராகிய சேரமான்பெருமாள்நாயனாரை நினைந்துகொண்டே சென்றார். சேரமான்பெருமாள் தம்தோழரது செய்தியை அறிந்து உடனே ஒரு குதிரையின்காதில்

திருவைந்தெழுத்தை உபதேசித்து அதன்மீதேறித் தாமும் விண் வழியேசென்று சுந்தரமூர்த்திகளை அணுகி அவருக்குமுன் சேவித்துச்சென்றார். இருவரும் இறைவன் திருமுன் அடைந்தபொழுது சேரமான்பெருமாள் இறைவன் அனுமதியின்பேரில் இத்திருவுலாவை விண்ணப்பித்து இறைவனை உவப்பித்தார். கயிலையில் அதனைக்கேட்ட சாத்தனார் தரித்துத் திருப்பிடவூரில் வெளியிட்டனர் எனப் பெரியபுராணம் கூறும். சேரர்காவலர் இதனை ஆசுகவியாகப் பாடினார் என்பது "ஆதிஅந்தஉலா ஆசுபாடிய சேரர்" என அருணகிரிநாதர் அருளிச்செய்வதால் அறியலாம்.

உலாப்பிரபந்தங்களில் இதுவே காலத்தால்முந்தியது என்பது ஆதியுலா என்ற இதன் பெயராலே உணரக்கிடக்கின்றது.

> "ஆதியுலா வானுருகும் ஆரூரனைத்தமியேன்
> ஓதியுலா வானுருக்க வுன்னினேன்—சோதிகையும்
> மாநாகமும் குழைக்கும் மாமேரு வெற்பையொரு
> பூநாகமும் குழைத்தல் போல்"

என அந்தகக்கவி வீரராகவமுதலியார் திருவாரூருலா அவையடக்கத்திற் கூறுவதால் ஆன்றோர்கள் இதன்பால் வைத்திருந்த நன் மதிப்புப் புலனாகும்.

நூலின் பொருட்சுருக்கம்

சிவபெருமான் சீரார் சிவபுரத்தில் ஏரார்திருக்கோயிலினுள் இருக்கையில் அமரர்கள் திருமுன்றில் அடைந்து 'எங்களுக்குக் காட்சியளித்தருள்' என்று வேண்டினார்கள். அவர்கள் வேண்டுகோளுக்கு இரங்கிச் சிவபெருமான் கேசாதிபாதம்வரை உரிய அணிகலன்கள் அணிந்து திருமுன்றிலை அடைந்தான். முன்றிலிற் காத்திருந்த வசுக்கள் இருக்குரைத்தனர். எழுமுனிவரும் வாழ்த்தினர். ஆதித்தர் பன்னிருவரும் பல்லாண்டுகூறினர். இன்னும் ஏனைய தேவர்களும் முனிவர்களும் தத்தம் தகுதிக்கேற்பப் பலபணிவிடைகளைச்செய்ய அவர்களைக் கடைக்கணித்து வெள்விடைமேலேறிப் பூதகணங்கள் காவல்செய்து சூழ்ந்துவர ஏழுதிருவாயில்கள் கழிந்து வெளியே வந்தான். முருகன் மயிலிவர்ந்து முன்செல்ல, இந்திரன்

யானைமேற் பின்வரப் பிரமன் அன்னத்தின்மேல் வலப்பாலும் திருமால் கருடன்மேல் இடப்பாலும் இன்னும் தேவர் தலைவர்களும் ஏனையோர்களும் தத்தமக்குரிய நிலைகளில் தொடர்ந்துவந்தனர். பல்வகை இயங்கள் ஒலித்தன. இறைவன் உலாப்புறப்பட்டான். அனைவரும் பல்வகையாகப் போற்றியுரைத்தனர்.

சிவபெருமான் திருவீதியில் எழுந்தருளினன் என்றதைப் பறைமுழக்கத்தால் அறிந்தவுடனே பேதைமுதலாகப் பேரிளம் பெண் ஈறாக எழுவகைப்பருவத்துப் பொதுமகளிரும் மகிழ்ந்து திரண்டு மாளிகைகளிலுள்ள சூளிகையும் சூட்டும் முதலிய பல வேறு இடங்களில் ஏறிநின்று இறைவனைக் கண்ணாரக்கண்டு காமமீக்கொண்டு தத்தம் தகையிழந்து மயங்கினர்.

பேதைப்பருவத்துப் பெண் ஒருத்தி (5 முதல் 7 வயது) மாளிகை வாயிலில் இருந்த பந்தலின்கீழே பாவையைவைத்து விளையாடிக்கொண்டிருந்தாள். அந்தப்பாவைக்கு அணிகலன் துகில் முதலியன அணிந்து அழகு நோக்கி அவள் மகிழும்போது 'இதன் தந்தை யார்?' என்று ஒருத்தி கேட்ப, 'ஈசன் எரியாடி' என்று அவளது தாய் சொன்னாள். அவ்வேளையில் சிவபெருமான் அங்கே பவனிவரக் கண்டு தொழுதாள்.

பெதும்பைப்பருவத்துப்பெண் ஒருத்தி (8-11 வயது) தோழியரும் தானுமாய்க் காமனுருவம் எழுதிக்கொண்டிருக்கும்போது சிவபெருமான் அவ்வீதியில் வந்தான். அவனைக்கண்டு அவள் தன் நாணும் நலனும் நிறையும் வளையும் தோற்றாள்.

மங்கைப்பருவத்துப்பெண் ஒருத்தி (12—13 வயது) பொற்கூட்டிலிருந்த பூவையைக் கைமேல்வைத்துச்சொற்பயிற்றிக்கொண்டிருக்கையிற் சிவபெருமான் வெள்ளிமலைமேல் ஞாயிறுபோலத் தெருவழியே வந்தான். அவள் அவன் தோளையும் தன் தோளையும் அவன் தாரையும் தன் தாரையும் நோக்கினாள். அவன் தோளின் மேல் நோக்கம் வைத்தாள். அவள் வேட்கையாம் வெள்ளத்திடையழுந்தி வெய்துயிர்த்தாள்.

மடந்தைப்பருவத்துமாது ஒருத்தி (14—19 வயது) தன் தோழிகள் சூழத் தவிசேறியிருந்து யாழைத்திருத்திச் சிவபெருமான்மேல் மடலும் வண்ணமும் பாடும்பொழுதில் அவன் ஏறிவந்த விடையின்மணியோசைகேட்டுத் திரும்பிப்பார்த்தாள். அவனைக் கண்டாள்; வேட்கைகொண்டாள்; தன்நிறத்தை இறைவனது கொன்றைமாலை கவர, அதன் பொன்நிறத்தைத் தான் கவர்ந்து புலம்புற்றாள்.

அரிவைப்பருவத்து அணங்கு ஒருத்தி (20-25வயது) இன்னிசை வீணையைத் திருத்தி இறைவனைப் பாடத்தொடங்கும்போது, அவன் விடைமேல்தோன்றினான்; கண்டாள். இன்னிசையும் இப்பிறப்பும் தமிழும் வீணையும் ஆகிய எல்லாவற்றையும் கைவிட்டாளாகி நங்கையவளும் நலம்தோற்றாள்.

தெரிவைப்பருவத்துச் சேயிழை ஒருத்தி (25-31வயது) பொன்னாலாகிய கவறுகளையும் வெள்ளிப்பலகையையும் கொண்டு ஆயத்தோடு சூதுபொரும்போது சிவபெருமான் அங்கே தோன்றுதலும் கண்டு நாண் நலம் ஏண் (வலிமை) சூலம் எல்லாம் தோற்றாள்.

பேரிளம்பெண் ஒருத்தி (32—40வயது) பண்கவரும் சொல்லாள் பல்லாண்டுபாடவும் வெண்கவரி பலர் வீசவும் வீற்றிருந்தவள்,

"கண்ணவனை யல்லது காணா செவியவன
தெண்ணருஞ்சீ ரல்லா திசைகொள்ளா—அண்ணல்
கழலடி யல்லது கைதொழா அஃதான்
றழலங்கை கொண்டான்மாட் டன்பு"

என்று வெண்பாவொன்றை விரித்துச் சொல்லிக்கொண்டிருக்கும்போது சிவபெருமான் மாடமறுகில் வரக்கண்டாள்; உருகிமெய் வெளுத்து மால்கொண்டாள்.

இவ்வாறு அவன் பவனிவந்த வீதியிலே அவனைக்கண்ட பெண்டிருற்ற ஆரவாரம் மிகப்பெரிதாகும்படி பவனிவந்தான் என்பது நூலின் சுருக்கமான பொருள்.

பத்திச்சுவையும் இலக்கியநலமும் பொலிந்துவிளங்குவது இந்த உலாப்பிரபந்தம். இதனுள், பாட்டுடைத்தலைவனுகிய சிவபெருமானைச் சிறப்பித்துக்கூறும் சொற்றொடர்கள்பல கடவுளிலக்கணம் கவினுறக் காட்டுவன.

துறவாதே யாக்கைதுறந்தான்; ஆழாதே ஆழ்ந்தான்; ஊழால் உயாரதே ஓங்கினுன்; ஓதாதுணர்ந்தான்: என்பன முரண்டொடைபொருந்த அமைந்தன.

வினையின் நீங்கியவன், எங்கும் நிறைந்தவன், சுதந்தரமுடையவன், விளங்கிய அறிவினன்: என்பவை கடவுளின் தன்மைகளைக் காட்டுகின்றன.

"அரியாகிக் காப்பான். அயனுய்ப் படைப்பான். அரனுயழிப் பானுந்தானே" என்பவை முத்தேவருமாயிருப்பவன் தானே என்பதை உணர்த்தும்; எனினும் முத்தேவரினும் மேலானவன் என்பதைத் "தேவரறியாத தோற்றத்தான்" என்ற தொடர் தெரிவிக்கும்.

"எவ்வுருவில் யாரொருவர் உள்குவா ருள்ளத்துள்
அவ்வுருவாய்த் தோன்றி அருள்கொடுப்பான்"—என்பது,

"ஆரொருவ ருள்குவார் உள்ளத் துள்ளே அவ்வுருவாய்
நிற்கின்ற அருளும் தோன்றும்" என்ற தமிழ்மறையையும்,

"யாதொரு தெய்வங் கொண்டீ ரத்தெய்வ மாகி யாங்கே
மாதொரு பாகனுரே வருவர்"

என்ற சித்தியார்ச்செய்யுளையும் நினைவூட்டுகின்றது.

வானநீர் தாங்கி மறையோம்பிப் பிறையும் சூலமும் உடையவாய் வெள்ளையணிதலால் மாடங்கள் சிவபெருமான்போல் வடிவுடையன என்று கூறியிருப்பது மிக அழகாக இருக்கின்றது. இது போலும் உவமைகளும் உருவகமும் பல இடங்களில் இந்நூலில் வந்துள்ளன.

பேதைப்பெண்ணை வருணிக்கும்போது, "நோக்கிலும் நோய் நோக்கமாட்டாள்", "வாக்கும் பிறர்மனத்தை வஞ்சியாள்" என்பன போன்ற தொடர்கள் மிகச் சுவைபயப்பன. திருக்குறட்பாக்களைப் பல இடங்களில் வெகுபொருத்தமாக ஆசிரியர் ஆண்டிருக்கின்றார். 'இடைக்கு மேலும் கீழும் விலையுயர்ந்த ஆடையும் அணியும் அணிவித்து இயல்பாகவே மிடிபட்ட இடையை மேலும் மேலும் துன்புறுத்தினாள் ஒருத்தி' என்று கூறவந்தவர் "இல்லாரை எல்லாரும் எள்ளுவர் செல்வரை எல்லாரும் செய்வர் சிறப்பு" என்ற திருக்குறளை எடுத்தாண்டுள்ளார். பேரிளம்பெண்ணைப் புனைந்துரைக்கும்போது '"கண்டுகேட்டுண்டுயிர்த்து" என்னும் திருக்குறட் கருத்தையே மேம்படுத்தினாள் இவள்' என்கின்றார். தெரிவையை வருணிக்கும்போது 'மழலைவாய்ச்சொல்லின் குளிர்ச்சியால் புலரியொப்பாள், வெப்பம்விளைத்தலால் உச்சியொப்பாள், சேவடியும் கையும் செம்மையால் அந்தி ஒப்பாள்' என்பன முதலாகக் காலத்தின் வேறுபாடுகளை உவமையாகக்கூறியிருப்பது கவிநலம் நுகர்வார்க்குக் கழிபேருவகைதரும்.

பேரிளம்பெண் பாடியதாக நூலினிடையே "கண்ணவனையல்லது" என்ற வெண்பாவொன்றை அமைத்திருக்குந் திறம் மிகப் பாராட்டற்பாலது. 'பலருக்குக் காட்சிகொடுத்தபின் ஈண்டுவந்தனையே இறைவா' என்று பிணங்குபவளாய்ப் பேரிளம்பெண் கூறும் கூற்றாக "வண்ணச்சிலம்படி மாதரார் தாமுண்ட கண்ணெச்சில் எம்மையே ஊட்டுவான் அண்ணலே வந்தாய்" என்பது அவளது காதல்மிகுதியையும் பெண்மைத்தன்மையையும் நன்குகாட்டுகின்றது. இன்னும் விரிப்பிற் பெருகும்.

மதிப்புரை

[திருக்குறள் பொருட்பால் காலிங்கரும் பரிப்பெருமாளும்செய்த உரைகளுடன்:—ஸ்ரீவேங்கடேசுவரர் கீழ்த்திசைக் கலைக்கழகத்தின் 14-ஆம் வெளியீடு. பதிப்பாசிரியர்:-உயர்திரு வித்வான் T. P. பழனியப்பபிள்ளையவர்கள் B.O L. விலை ரூபா. 4. கிடைக்குமிடம்- ஸ்ரீவேங்கடேசுவரர் கீழ்த்திசைக்கலைக் கழகம், திருப்பதி.]

உலகமக்களெல்லாரும் எக்காலத்தும் மேற்கொள்ளத்தக்க அறநெறி பொருணெறி இன்பநெறி முறைகளை விரிக்கும் நூல்களுள் முன்னெண்ணத் தக்க பெருமைவாய்ந்தது திருக்குறளென்பது, அறிவுடையார் துணிபு. திருக்குறள் முப்பாலுணர்ச்சியும் உலகமக்கட்குவேண்டுவதாயினும், தன்னை செய்திய இந்நிலமக்களுக்கு அம்முப்பாலுட் பொருட்பாலுணர்ச்சி மிகமிக இன்றியமையாததென்பது சொல்லாமலேயமையும். அப்பொருட்பாலுக்குப் பண்டையோர்கண்ட உரைகள் பல. அவற்றுள், காலிங்கரும் பரிப்பெருமாளும் கண்டவுரைகள் இதுவரை யாவரும்படித்துப்பயனடையுமாறு அச்சிடப் படாதிருந்த குறைதீர அவற்றை ஆராய்ந்து, வித்வான் T. P. பழநியப்ப பிள்ளையவர்கள் B.O.L. ஸ்ரீவேங்கடேசுவரர் கீழ்த்திசைக்கலைக்கழக வெளியீடாக விரிந்த முகவுரையுடன் அச்சிட்டு வெளியிட்டுள்ளார்கள். இவ்வுரைகள் வள்ளுவர்வாய்மொழியினுள்ளுறைபொருள்களைப் பிறவுரைகளோடொருங்கு நோக்கியுணரும் விழைவுடையார்க்கெல்லாம் பயன்படும். பதிப்பாசிரியர் இவ்வுரைப்பதிப்பினை யாவரும் எளிதிற்படித்துணரச்செய்யும் நோக்குடையராயினும், இவ்வுரைப்பதிப்புள் பெரும்பாலும் நிலைமொழி வருமொழிகள் வேற்றுமைப்பொருளிலும் அல்வழிப்பொருளிலும் இணைந்துநிற்கும்நிலையிலமையும் சந்திகாரியங்களின்றி ('அவை அஞ்சாமை, அவை அறிதல், இடுக்கண் அழியாமை, நோய் உற்றவனும், நோய் தீர்க்கும் அவனும்' என்பவை போலத் தனித்தனிச் சொற்களாகப் பிரித்தமைத்திருப்பது அவர்நோக்கொடு மாறுபட்டுப் படிப்பார்க்கு எளிதிற்பொருள்விளங்காதபடி தடைசெய்வதாயிருக்கிறது. இத்தடை மறுபதிப்பில் நீங்குமென்று நம்புகிறோம். அன்றியும், வினைத்திட்பத்து முதற்குறளிற் காலிங்கருரை 3ஆம் வரியுள் 'அசையாது' என்றிருக்கற்பாலது 'அசைவது' எனவும், மருந்து என்னும் அதிகாரத்து 8ஆம் குறளிற் காலிங்கருரை 5ஆம் வரியுள் 'செயல்பிழையாமல் என்றிருக்கற்பாலது 'செயல்விழையாமல்' எனவும், மருந்து 10ஆம் குறளிற் காலிங்கருரை 6ஆம் வரியுள் 'பிணியளவும்' என்றிருக்கற்பாலது 'பின் அளவும்' எனவும், 7ஆம்வரியுள் 'தணிமருந்து' என்றிருக்கற்பாலது 'தனிமருந்து' எனவும், பதிக்கப்பட்டிருத்தலும் பொருள்விளங்காதபடி தடைசெய்யும். இவையும் இவைபோல்வனபிறவும் மேலேகாட்டியபடி மூலத்தொடு பொருந்துமாறு, திருத்திப் பிழைதிருத்தத்திற் சேர்த்துக்கொள்ளத்தக்கனவாயுள்ளன.

இவ்வரியவுரைநூல்கள் சிதலுக்கிரையாயிறந்துபடாது நிலவச்செய்த ஸ்ரீவேங்கடேசுவரர் கீழ்த்திசைக்கலைக்கழகம் மேலும் பல தமிழ்நூல்களைத் திருந்தியமுறையில் வெளியிட்டு நீடுநிலவுக.

[சித்திரக்கதைப்பாட்டு (இரண்டாம்படி):—இயற்றியவர்:—திரு. பெ. நா. அப்புஸ்வாமிஐயரவர்கள் B.A., B.L. விலை அணா 8. கிடைக்குமிடம்:—பெ. நா. அப்புஸ்வாமிஐயரவர்கள் B.A., B.L. சித்திரக்குளச்சதுக்கம், மயிலாப்பூர், சென்னை.]

சித்திரக்கதைப்பாட்டு முதற்படியின் மதிப்புரை செந்தமிழில் முன்னமே வெளிவந்துளது. இவ்விரண்டாம்படியுட் காணப்படும் பாடல்கள் படித்தற்கினியன; மாணவர் தகுதிக்கேற்றன; உயர்ந்தகருத்துக்களும் நீதிகளும் பொதிந்தன; பலவகைச்சுவைகளும் விரவியன; உரையாடல்போலச் சிறிய சிறிய சொற்றொடர்களாலியன்றன; படிக்கும் சிறார்களை மனமகிழ்ச்சியோடு மேலும் மேலும் படிக்கத்தூண்டுவன; ஆரம்பப்பள்ளியிற்பயிலும் மாணவர்க்குப்பாடமாகவைக்கத்தக்கன; கதைகள் இனிதுவிளங்குமாறமைந்த கதைச்சுருக்கங்களை முன்னேகொண்டன; பாடற்பொருளேயன்றி மாணவர் அறியவேண்டிய பிறபொருள்களையும் அறிவுறுத்தும் குறிப்புக்களையும் வினாக்களையும் பின்னேயுடையன. பள்ளியாசிரியர்களும் கல்வியிலாகா அதிகாரிகளும் இதனைப் பாடபுத்தகமாக்கி, ஐயரவர்கள் இத்துறையில் மேலும் முயன்று பல புத்தகங்களை வெளியிடச்செய்வார்களென்று நம்புகிறோம்.

[அமலனுதிபிரான் அநுபவம் (திவ்யக்ரந்தமாலை I.) :—இயற்றியவர்:— திரிசிரபுரம் ஸ்ரீ. A. V. கோபாலாசாரியாரவர்கள் விலை ரூபா ஒன்று. இயற்றியவரிடம் பெறலாம்.]

அமலனுதிபிரான் என்பது திருமாலின் அர்ச்சாவதாரவைபவங்களை விரித்துப்பேசிச்செல்லும் நாலாயிரப்ரபந்தத்துள் அரங்கநகரப்பன்விஷயமாகத் திருப்பாணாழ்வாரால் அருளிச்செய்யப்பட்டதொரு பிரபந்தமாகும். இது பத்துப்பாசுரங்களால் அமைந்தது. முதற்பாசுரம் ‘அமலனுதிபிரான்’ என்று தொடங்குவதால் இதற்கு ‘அமலனுதிபிரான்’ என்று பெயராயிற்று. இதனுள் பாணநாதன், நம்பெருமாள் திருமேனியழகைப் பாதாதிகேசாந்தமாக நோக்கியனுபவிக்கிறார். இந்நூற்கு முன்னோருரைத்த அரியபெரிய உரைகள் பல உள. அமலனுதிபிரான் அநுபவம் என்பது அமலனும் ஆதிபிரானுமான பகவானைத் திருப்பாணாழ்வார் அநுபவித்த அநுபவம் என்று பொருள்படும். அமலனும் ஆதிபிரானுமான பகவான் திருப்பாணாழ்வாரையநுபவித்த அநுபவம் என்றும் ‘அமலனுதிபிரான்’ என்னும் பிரபந்தானுபவம் என்றும் பொருள்கொள்ளலாம். வடமொழி தென்மொழி ஆங்கிலமொழிப்புலமையும் வழக்கியலுணர்ச்சியும் நுண்மதியும் நல்லாசிரியரிடம் முறையே பெற்ற கல்விகேள்விகளும் வாய்ந்த ஆசாரியரவர்கள், வேதங்களிலும் உபநிஷத்துக்களிலும் கீதையிலும் இதிகாச முதலியவற்றிலும் காணப்படும் பகவானுடைய சொரூபரூபகுணவிபூதிகளும் பிறவும் அமலனுதிபிரானிலும் காணப்படுதலை முன்னையோருரைகொண்டும் தாம் ஆராய்ந்தறிந்ததுகொண்டும் இப்புத்தகத்துள் விரித்து விளக்கியிருக்கிறார். இவ்வுரையானது முதலிற் பதப்பொருளும் பின் பதசாரமும் மேற்கோளும் விளக்கமுமாயமைந்து படிப்பார்க்கு மகிழ்ச்சி விளைப்பதாயிருக்கிறது.

II. செந்தமிழ்ப்பிரசுரம்.

1.	ஐந்திணையைம்பது (உரையுடன்)	0	4	0
2.	கணுநால் (5) இனியநாற்பது (உரை) ...	0	3	0
4.	புலவராற்றுப்படை	0	3	0
7.	திருநூற்றந்தாதி (உரையுடன்)	0	6	0
8.	திணைமாலைநூற்றைம்பது (உரையுடன்) ...	0	8	0
9.	அநுமானவிளக்கம்	0	10	0
10.	அட்டாங்கயோகக்குறள்	0	2	0
13.	நான்மணிக்கடிகை (பழைய உரை)	0	4	0
14.	முத்தொள்ளாயிரச்செய்யுட்கள்	0	3	0
16.	திருவாரூருலா	0	8	0
17.	சுகசந்தர்சனதீபிகை	0	12	0
18.	இயற்கைப்பொருட்பாடம்...	0	4	0
19.	தேவையுலா	0	3	0
21.	சிதம்பரப்பாட்டியல் (உரையுடன்)	0	8	0
24.	குருமொழிவினாவிடை	0	1	0
25.	கேசவப்பெருமாள் இரட்டைமணிமாலை ...	0	2	0
26.	திருத்தணிகைத்திருவிருத்தம்	0	1	0
27.	மதுரைத்திருப்பணிமாலை...	0	8	0
30.	ஞானாமிர்தக்கட்டளை	0	3	0
32.	மனீஷாபஞ்சகம்	0	8	0
36.	உவமானசங்கிரகம்	0	1	0
37.	மாறனலங்காரம் மூலமும் உரையும்	4	8	0
38.	திருப்புல்லாணிமாலை	0	2	0
40.	திருமாலிருஞ்சோலைமலை அழகர்பிள்ளைத்தமிழ் ...	0	8	0
41.	பொருட்டொகைநிகண்டு	0	6	0
42.	அகராதிநிகண்டு	0	12	0
43.	மேகவிடுதூது	0	2	0
44.	திருக்குற்றாலமாலை	0	2	0
45.	தண்டலையார்சதகம்	0	4	0
46.	இராமோதந்தம்	0	3	0
47.	பழமொழிமூலமும் பழைய உரையும் (2-வது 100)...	1	0	0
48.	சேதுநாடும் தமிழும்	0	6	0
52.	கூடற்புராணம்	0	10	0
53.	திருவள்ளுவர் (தமிழ்)	0	6	0
	ஷை (ஆங்கிலம்)	0	6	0
54.	அரும்பொருள்விளக்கநிகண்டு	1	4	0

55.	மாறனகப்பொருளும் திருப்பதிக்கோவையும் ...	0	12	0
56.	பாப்பாவினம்	0	10	0
57.	மதுரைமும்மணிக்கோவை	0	5	0
58.	பழனிப் பிள்ளைத்தமிழ்	0	3	0
59.	கடம்பர்கோயில் உலா	0	6	0
60.	சங்கரநயினார்கோயில் அந்தாதி	0	6	0
61.	கலைசைக்கோவை	0	12	0
62.	பெருந்தொகை	5	0	0
63.	சூடிக்கொடுத்தநாய்ச்சியார்தோத்திரப்பாமாலை ...	0	5	0
64.	சிராமலைக்கோவை	0	12	0
65.	மத்யமவியாயோகம்	0	2	0
67.	அமிர்தாஞ்ஜலி	0	2	0
68.	திருமுருகாற்றுப்படை	0	10	0
69.	பொன்வண்ணத்தந்தாதி மூலமும் உரையும் ...	0	8	0

குறிப்பு:-ஸ்டாக்கிலில்லாத சங்கப்பிரசுரங்களும் செந்தமிழ்ப்பிரசுரங்களும் இதில் குறிக்கப்படவில்லை. மறுபடி அச்சிட்டு வெளியானதும் இப்பட்டியலில் சேர்க்கப்படும்.

குறிப்பு:-1. சங்கத்தினின்று மாதமொருமுறை அரிய பெரிய விஷயங்களைக்கொண்டுவெளியாகிவரும் இச்“ செந்தமிழ் ”ப்பத்திரிகைக்கு வருஷச்சந்தா ரூ 4. தனிப்பிரதியின் கிரயம் அணா 8. வெளிநாடுகளுக்கு வருஷசந்தா ரூ 4—8—0. இதுவரை 44 தொகுதிகள் பூர்த்தியாயிருக்கின்றன. இவற்றுள் 1, 2, 3, 6, 7, 8, 9, 10, 16-ம் தொகுதிகள் கைவசமில்லை. பைண்டு செய்யப்பெறாததொகுதிகள் தொகுதி 1-க்கு ரூ 4—0—0-வீதமும், பைண்டு செய்யப்பெற்ற தொகுதிகள் தொகுதி 1-க்கு ரூ 5—0—0 வீதமும் விற்கப்பெறும். வி. பி. சார்ஜ் பிரத்தியேகம்.

2. சங்கப்பதிப்புப்புத்தகங்களை ஒரு ரூபாய்க்கும் அதற்கு மேற்பட்டும் வாங்குவோர்கட்கு ரூபா ஒன்றுக்கு அரையணா வீதம் கமிஷன் தள்ளிக்கொடுக்கப்படும்.

3. புத்தகவியாபாரிகள் வாங்கும் சங்கப்பிரசுரங்களுக்குச் சர்க்கார் உத்திரவுப்படி 100-க்கு 15 வீதம் கமிஷன் தள்ளிக்கொடுக்கப்படும்.

லக்ஷ்மீநாராயணன்.

மானேஜர்.